முருகப்பெருமான் துணை

**மகான் அசுவினித்தேவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.09.2022**, புதன்கிழமை

1. மூச்சுக் குதிரையை தானடக்கி
   முழுமை வேண்டி யோகம்தனை
   அச்சமிலா பயிலுகின்ற அன்பர்களே
   அருளுவேன் அனுகூல ஆசிதனை
2. ஆசிதனை அசுவினித்தேவர் யானும்
   ஆற்றல்பட சுபகிருது தரிவை திங்கள்
   பேசிட சதுர் திகதி கணக்கன் வாரம்
   **(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 04ம் நாள், 21.09.2022 புதன்கிழமை)**
   பேரின்பம் உலகோர் கண்டுவாழ
3. வாழவே வந்துசென்ற ஞானிகள்
   வாழுகின்ற ஞானி அரங்கன் வழி
   ஞாலமதில் அனுகி அருளுபதேசம்
   நம்பிக்கை வைத்து ஏற்று
4. ஏற்றுமே நாம செப பலத்துடன்
   எண்ணம் தூய்மை காணவே
   ஆற்றல்பட இயங்கினால் போதும்
   அகமதில் அமைதி நிறைவு கூடி
5. கூடியே மூச்சு எனும் அசுவினி
   குறையிலா சகல நிலையையும்
   நாடியே ஞான சித்திக்கும்
   நாடிசுத்தி வாசி வசம் என்கின்ற
6. என்கின்ற படிநிலைகளை எல்லாம்
   இயல்பாகக் கடந்து உயர்ந்து
   இன்பமதை நீ தேடா வண்ணம்
   என் தலைவன் முருகனே நடத்தி வைப்பான்
7. வைப்பது ஞானிகள் செயல்
   வணங்குவது உங்கள் கடமை
   ஒப்புக் கொண்டு அரங்கஞானி
   ஓங்காரன் விதித்த தரும வழிகளை
8. வழிகளை பிறவிக் கடமையாக
   வழுத்திடுவேன் கலியுக மக்கள்
   தெளிவுபட ஏற்றுச் செய்திட
   தேக்கம் பின்னடைவு என்பதில்லா
9. என்பதில்லா ஞானவழித் தேறி
   ஈதூழே வந்த நோக்கங்களை
   இன்ப துன்பங்களை கடந்து
   இணையிலா ஞானியர்கள் வழி நடந்து

10. நடந்துமே அரங்கன் அவதார
நடப்பின் சூட்சுமம் அறிந்து
தடையின்றி சன்மார்க்க சமத்துவ
தனித்துவ பலங்கள் கூடி

11. கூடியே கலியின் தன்மை அகன்று
குருவருள் திருவருள் வழி
சுடரெனும் பிறவா பெருநிலை அடைவர்
செப்பிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–